**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT/SPECIAL COURT UNDER E.C. ACT CASES, THANJAVUR.

**C.C. No - 12/2022**

**Prosecution PW** - 4

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. முருகானந்தம் | Occupation | |
| Husband/Father Name | | Village | |
| Taluk | | Age | |
| Date | 07.11.2024 | | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873
**Accused A1,A2, A3, A4 absent, petition U/s. 355 BNSS filed and allowed. A5 produced on VC. On memo by the counsel for A5. witness being examined.**

முதல் விசாரணை -

நான் திருவாரூர் மாவட்டம் கியூ பிரிவு குற்ற புலணாய்வு பிரிவில் காவல் சிறப்பு உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 01.12.2019ம் தேதி நாகப்பட்டிணம் கியூ பிரிவு அலுவலகத்தில் காவல் ஆய்வாளர் அருண்பிரசாத் அவர்களுடன் பணியில் இருந்தபோது அதிகாலை 2 மணிக்கு காவல் ஆய்வாளர் அவர்களின் இரகசிய தகவலாளி நிலையம் ஆஜராகி இலங்கைக்கு கடத்தல் பொருள் கடத்துள்ளதாகவும், என்னுடன் வந்தால் அடையாளம் காட்டுவதாகவும் கூறியதை காவல் ஆய்வாளர் அவர்கள், உயர் அதிகாரிக்கு தகவல் தெரிவித்து அனுமதி பெற்று அதனை பொதுநாட்குறிப்பில் பதிவு செய்து 2.30 மணிக்கு காவல் ஆய்வாளர், தகவலளர், உதவி ஆய்வாளர்கள் கனகசுந்தரம், மணிகண்டகணேஷ், ராஜகோபால், சுவாமிநாதன், சிறப்பு உதவி ஆய்வாளர் அண்ணா, ஆகியோர்களுடன் நானும் அரசு நான்கு சக்கர வாகனத்திலும், சிறப்பு உதவி ஆய்வாளர்கள் ராஜ்குமார், பூமன், வெங்கடேசன், உதயகுமார், தலைமைகாவலர்கள் ராஜசேகர், பாண்டிதுறை, மணிகண்டன், செல்வகணபதி, பாலசுப்பிரமணியன், கணேஷ்குமார் ஆகியோர்கள் அவரவர் இருசக்கர வாகனத்திலும் காலை 4.30 மணிக்கு வடுவூர் காவல்நிலைய சரகம் வடுவூர் சோதனை சாவடி முன்பு கண்காணித்தபோது காலை 6.30 மணிக்கு தகவலாளி சொன்ன அடையாளங்களுடன் வந்த SWARAJ MASTHA MAXCAP 100 என்ற TN 34 – H5492 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை தகவலாளி காண்பித்து விட்டு சென்றுவிட்டார். அதன்பிறகு வாகனத்தை நிறுத்தி அதிலிருந்த நபர்களிடம் காவல் ஆய்வாளர் அவர்கள் தங்கள் அடையாள அட்டை காண்பித்து தான் யார் என்று அறிமுகம் செய்து கொண்டு வாகனத்தில் இருந்த நபர்களை விசாரிக்க ஓட்டுனர் இருக்கையில்

இருந்தவர் பெயர் செந்தில்குமார் என்றும், அவர் கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும், அவருக்கு பக்கத்தில் உட்காந்திருந்த இரண்டு பேர்களில் அரிவேந்திரன் மதுரையை சேர்ந்தவர் என்றும் மற்றொருவர் சரவணன் கோயம்புத்தூர் மாவட்டத்தை சேர்ந்தவர் என்றும் பெயர் விலாசத்துடன் கூறினார்கள். அவர்களிடம் ஆய்வாளர் இலங்கைக்கு கடத்தல் பொருள் ஏதோ கொண்டு செல்வதாக நம்பதகுந்த தகவல் வந்துள்ளது என்று கூறி உங்களையும் உங்கள் வாகனத்தையும் சோதனை செய்ய வேண்டுமென கூறி அதற்கு நாங்கள் நீதிதுறை நடுவரிடமோ, அல்லது அரசிதழ் பதிவு பெற்ற அதிகாரிடமோ கொண்டு சென்று சோதனை செய்து கொள்ள உங்களுக்கு உரிமை உள்ளது என்று சொன்னபோது அவர்கள் எங்கும் வர விருப்பம் இல்லை என்றும், ஆய்வாளராகிய நீங்களே சோதனை செய்யலாம் என்று கூறினார்கள். அதனை ஆய்வாளர் எழுத்து மூலமாக எழுதி மேற்படி மூனறு நபர்களிடம் சோதனை சம்மத கடிதம் வழங்கினார். பின்னர் ஆய்வாளர் மேற்படி வாகனத்தை சோதனை செய்ய அதில் 25 வெள்ளை நிற சாக்கு பைகள் இருந்தது. ஒவ்வொரு சாக்கு பையை பிரித்து பார்த்தபோது அதில் கஞ்சா இருப்பது தெரிய வந்தது. ஆய்வாளர் வாகனத்தில் இருந்த செந்தில்குமாரிடம் எங்கு கொண்டு செல்கிறீர்கள் என்று கேட்க கஞ்சாவை தனது ஒன்றுவிட்ட சகோதரர் மதுரை உசிலம்பட்டியை சேர்ந்த பால்பாண்டி என்பவர் திருச்சி மதுரை சாலையில் உள்ள விராலிமலை டோல்கேட் அருகில் அதிகாலை 2.30 மணிக்கு ஒரு லாரியிருந்து மேற்படி தங்கள் வந்த SWARAJ MASTHA MAXCAP 100 என்ற TN 34 – H5492 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை மாற்றி கொடுத்தாக கூறினார். அதனை வேதாரண்யம் கொண்டு வந்து ஒப்படைக்கும்படியும் அங்கு உள்ள கஞ்சா ஏஜெண்டு மூலம் இலங்கைக்கு அனுப்புவதாக தெரிவித்து அவரும் அவரது கூட்டாளியும், இனோவா காரில் முன்பாக சென்றுவிட்டதாக ஆய்வாளரிடம் கூறினார். பின்னர் மேற்கண்ட கஞ்சா மூட்டைகளை பிரித்து பார்த்து நாங்கள் கொண்டு சென்ற எடை மிஷினில் எடைபோட்டு பார்க்க 23 சாக்கு பைகளில் தலா 2 கிலோ வீதம் 14 பொட்டலங்கள் என 644 கிலோ கஞ்சாவை இரண்டு சாக்கு பைகளில் தலா 2 கிலோ வீதம், 12 பொட்டலங்கள் என 48 கிலோ கஞ்சாவும், ஆக மொத்தம் 692 கிலோ கஞ்சா இருந்ததை அங்கு இருந்த நபர்கள் வடுவூரை சேர்ந்த குமரன் மற்றும் ராமசாமி ஆகியோர்களை சாட்சியாக இருக்க ஆய்வாளர் அழைத்தபோது அவர்கள் வர மறுத்துவிட்டார்கள். பின்னன்ாஉ டன் வந்த போலிசு சாட்சிகள் மணிகண்டகணேஷ், ராஜகோபால் முன்னிலையில் ஆய்வாளர் மகசரில் கைப்பற்றினார். பின்னர் எதிரி மற்றும் தடயத்துடன் 13.30 மணிக்கு நாகப்பட்டிணம் போதைபொருள் நுண்ணறிவு பிரிவு ஆய்வாளர் சாந்தகுமாரி அவர்களிடம் எதிரிகள் மற்றும் தடயம், கைப்பற்றுதல் மகசர் ஆகியவற்றை தனி அறிக்கையுடன் ஆய்வாளர் ஒப்படைத்தார். ஆய்வாளருக்கு உதவியாக இருந்தேன். காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

குறுக்கு விசாரணை எதிரிகள் தரப்பில்

வடுவூரில் தயார் செய்ததாக சொல்லப்படும் எந்த ஆவணங்களிலும் நான் கையெழுத்து இடவில்லை. நான் சம்பவ இடம் சென்றதற்கான ஆதாரங்கள் எதையும் நீதிமனற்த்தில் தாக்கல்

செய்யவில்லை என்றால் சரிதான். நான் சொன்ன நாள் நேரத்தில் சம்பவ இடம் செல்லவில்லை என்றாலும் எந்த பொருளையும ஆய்வாளர் கைபற்றவில்லை என்றாலும் எந்த ஆவணங்களும் ஆய்வாளர் தயார் செய்யபடவில்லை என்றாலும், முதல் விசாரணையில் சொல்லியுள்ள விவரங்கள் அனைத்தும் மேல் அதிகாரிகளின் உத்தரவிற்கு இணங்க பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/ஜி.சுந்தரராஜன்

அமர்வு நீதிபதி,
இன்றியமையாப் பண்டங்கள் சட்ட
சிறப்பு நீதிமன்றம்,
தஞ்சாவூர்.